B.A HISTORY
ALLIED COURSE IV
PUBLIC ADMINISTRATION II
18K4HAH4

ஓர் அமைப்பை திறமையாக இயக்கச்செய்ய கீழ்க்கண்ட காரணிகள் முக்கியமானவை

* பணம்
* உபகரணங்கள்
* மூலப் பொருள்கள்
* ஆட்கள்
* மேலாண்மை

மேற்கண்ட காரணிகளை பயன்படுத்தி அதிக பயன்களை அடைவதே மேலாண்மை எனப்படும்.

பொருள்

மேலாண்மை என்பது ஓர் அமைப்பை திறவா திறம்பட இயக்கி அவ்வமைப்பான் கொள்கையை அடைய செய்வதே ஆகும். ஆகவே அமைப்பினை இயக்கும் நுட்பமே மேலாண்மை எனப்படும்.

வரையறை : J.D. மில்லட் என்பவரின் கருத்துப்படி “அரசாங்கச் சட்டங்களைச் செயல்படுத்துவதே பொதுத்துறை நிர்வாக” மாகும். அமைப்புகள் அரசாங்கத்தின் சட்டத்தினைச் செயல்படுத்தும் கருவிகள் ஆகும்.

செக்லர் அட்சன் என்பவர் “மேலாண்மை எனப்படுவது அவ் வமைப்பின் கொள்கைகளை அவ்வமைப்பில் பணிபுரியும் பணியாளர்கள் மேலாகச் செய்து முடித்தலே ஆகும்.

## மேலாண்மையின் தன்மைகள்

மேலாண்மை என்பது மூன்று தன்மை கொண்டது

மேலாண்மை

- எங்கும் ஒரே மாதிரியான கொள்கைகளைக் கொண்டது
- கூட்டு நடவடிக்கை
- ஒரு தொழில்

(1) எங்கும் ஒரே மாதிரியான கொள்கைகளைக் கொண்டது

பொது நிறுவனமாக இருந்தாலும் தனியார் நிறுவனமாக இருந்தாலும் மேலாண்மையின் கொள்கைகள் ஒரே மாதிரியாக உள்ளன.

(2) மேலாண்மை என்பது ஒரு கூட்டு நடவடிக்கையாகும்

மேலாண்மை ஓர் அமைப்பை இயக்குதல் என்ற மேற்கொள்- பணியானது தனி ஒரு நபரால் மட்டும் மேற்கொள்ளப்படுவது மாறாக அவ்வமைப்பின் பல நிலைகளிலுள்ள மேற்பார்வை மேற்கொள்ளப்படுகிறது.

(3) ஒரு தொழில்

மேலாண்மை ஒரு தொழில் மேலாண்மை என்ற தொழிலில் ஒருவர் நாளுக்குநாள் தன்னுடைய திறமையை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு உள்ளன. மேலும் அவர் மேலாண்மை வல்லுனராக முடியும். அதனால் மேலாண்மை ஒரு தொழிலாகக் கருதப்படுகிறது.

## மேலாண்மையின் அடிப்படைகள்

மேலாண்மையின் அடிப்படைகளின் கூறுகள் இரண்டு ஆகும்

## மேலாண்மையின் அடிப்படை கூறுகள்

- அதிகாரம் (Authority)
- பொறுப்பு (Responsibility)

இவை ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படும். ஒரு துறையில் ஒரு பதவியில் ஒருவர் நியமிக்கப்படுவதின் மூலமாக அந்த நபர் அப்பதவிக்குரிய அதிகாரங்களைப் பெறுகின்றார்.

**மெக்ஸ்வீபர் (Max weber)**

இவர் அதிகாரம் என்ற வார்த்தையை கூறியவர். இவர் அதிகாரம் அல்லது ஆணை உரிமை என்பதை மூன்று வகையாகப் பிரித்துள்ளார்.

அதிகாரம்
or
ஆணை உரிமை

- பரம்பரை ஆணைஉரிமம்
- சட்டரீதியான ஆணைஉரிமம்
- ஒருவர் பிறரைக் கட்டுப்படுத்துகின்ற ஆணை

**(i) பரம்பரை ஆணை உரிமம்**

ஒருவர் தன்னுடைய மூதாதையர்களிடமிருந்து பரம்பரையாக பெறுவதின் மூலம் இந்த ஆணை உரிமம் பெறுகின்றனர்.

**(ii) சட்டரீதியான ஆணை உரிமம்**

ஒருவர் சட்ட ரீதியாக ஒருவருக்கு தரப்படும் ஆணை உரிமம்.

**(iii) ஒருவர் பிறரைக் கட்டுப்படுத்துகின்ற ஆணை**

ஆணையை தன் சொந்த குணநலன்களால் பெறுவது அதற்கு மாறா சார்ந்த அணை உரிமை என்று பெயர்.

# ஆணை உரிமையின் முக்கியக் கோட்பாடுகள்.

ஆணை உரிமையின் முக்கிய கோட்பாடு

- உணர்வுக் கோட்பாடு Theory perception
- திறமைக் கோட்பாடு Theory of competence
- தெளிவுக் கோட்பாடு Theory comprehensive

## (1) உணர்வுக் கோட்பாடு (Theory of perception)

ஆணையை பெறுபவர் ஆணையை உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு உணர்ந்தால் சிறப்பாக செயலாற்ற முடியும்

## (2) திறமைக் கோட்பாடு (Theory of Competence)

ஆணையிடும் நபர் ஆணையைப் பெறுகின்ற நபரின் திறமைக்கு ஏற்ப ஆணையிடுதல் வேண்டும்

## (3) தெளிவுக் கோட்பாடு (Theory of Comprehensive)

ஆணையிடும் நபர் தெளிவான முறையில் ஆணையிடு-வதின் மூலமாகத் தன்னுடைய ஆணையை பெற்ற நபரைக் பணி செய்ய வைக்க முடியும்.

## மேலாண்மை அதிகாரத்தின் வகைகள்

மேலாண்மையின் அதிகாரம் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது.

அதிகாரத்தின் வகைகள்

- திட்டம் தீட்டும் அதிகாரம்
- நிர்வாக அதிகாரம்
- வரவு செலவுத் திட்டம் தீட்டுகின்ற அதிகாரம்

(1) திட்டம் தீட்டும் அதிகாரம்

இந்த அதிகாரத்தின் மூலம் கொள்கை உருவாக்கும் பணியினை பெற்றுள்ளார்.

(2) நிர்வாக அதிகாரம்

இந்த அதிகாரத்தின் கீழ் ஓர் அதிகாரி அமைப்பிற்குத் தேவையான வரவு செலவு திட்டம் தயாரிக்கும் தகுதியினை பெறுகிறார்.

(3) வரவு செலவுத் திட்டம் தீட்டுகின்ற அதிகாரம்

ஓர் அதிகாரி அமைப்பிற்குத் தேவையான வரவு செலவு திட்டம் தயாரிக்கும் தகுதியினைப் பெறுகிறார்.

## மேலாண்மையின் பொறுப்புகள்

மேலாண்மை மூன்று வகையான பொறுப்புகளை கொண்டுள்ளது.

மேலாண்மையின் பொறுப்புகள்

- அரசியல் பொறுப்பு
- நிறுவனப் பொறுப்பு
- தொழில் பொறுப்பு

(1) அரசியல் பொறுப்பு

அரசியல் பொறுப்பு என்பது ஒரு மேலாளர் அத்துறையின் தலைமை நிர்வாகியாகிய அமைச்சருக்கு பொறுப்புள்ளவராக இருக்க வேண்டும். என்பதை குறிக்கும்.

(2) நிறுவனப் பொறுப்பு

ஒரு மேலாளர் தான் பணிபுரியும் நிறுவனத்திற்குப் பொறுப்பு உள்ளவராக இருக்க வேண்டும்.

(3) தொழில் பொறுப்பு

பணிபுரிகின்ற ஒவ்வொரு மேலாளரும் அவருடைய பதவிக்கு பொறுப்புள்ளவராக இருக்க வேண்டும்.

## மேலாண்மையின் முக்கியப் பணிகள்

J.D. மில்லட் (J.D millet) என்கின்ற ஆட்சியியல் வல்லுனரின் கருத்துப்படி மேலாண்மையின் பணிகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

மேலாண்மையின் பணி.

**சிறப்புப் பணி**

என்பது எதற்காக ஏற்படுத்தப் பட்டதோ அதை சிறப்பாக செய்வது சிறப்புப்பணி.

எ.கா - காவல் துறையின் தலைமை நிர்வாகி (சட்டம், ஒழுங்கை பாதுகாப்பது)

**பொதுப்பணி**

எல்லா துறைகளுக்கும் காணப்படும் பொதுவான பணியாகும். ஒவ்வொரு துறை மேலாளரும் துறை சிறப்பாக நடைபெற திட்டமிடுதல், அமைப்பை உருவாக்குதல், பணியாளர்களை நியமித்தல், இயக்குதல் ஒருங்கிணைத்தல், அறிக்கை சமர்ப்பித்தல், வரவு செலவுத்திட்டம் இவை பொதுப்பணியாகும்.

# முடிவெடுத்தல்
# DECISION MAKING.

முடிவு எடுத்தல் என்பது பொது நிர்வாகத்தில் குறிப்பாக மேலாண்மையில் முக்கியமானது. ஒருவர் தம்மை எதிர்நோக்கிய பிரச்சனையை தீர்ப்பதற்கான பல வழிகளில் ஒரு சிறந்த வழியை தேர்ந்தெடுப்பது முடிவு ஆகும்.

டெர்ரி (Terry) என்கின்ற அமைப்பியல் வல்லுநரின் கருத்துப்படி "முடிவு எடுத்தல் என்பது ஒரு பிரச்சினை மீது தீர்வு காண பல வழிகளில் ஒரு சிறந்த வழியினைத் தேர்ந்தெடுத்தல் ஆகும்.

**முடிவு எடுக்கும் போது பின்பற்ற வேண்டிய வழிகள்:**

(1) பிரச்சனையினை முதலில் உணர்தல் வேண்டும்

(2) பிரச்சனையை உணர்ந்த பின்பு அப்பிரச்சனையின் பின்னணியினையும் அது உருவான விதத்தினையும் பல செய்திகளையும் சேகரித்தல் வேண்டும்

(3) பிரச்சனையை தீர அலசி ஆராய்ந்த பின்பு பிரச்சனையின் விவாதத்தினை தன் கீழ் பணியாற்றுகின்ற பணியாளர்களுடன் மேற்கொள்ள வேண்டும்.

(4) பிரச்சனை ஆராய்ந்து முடிவு எடுத்த பின் முடிவின் நன்மை தீமையை ஆராய வேண்டும்.

(5). ஒவ்வொரு வழியின் மதிப்பீடு செய்ய வேண்டும்.

(6) முடிவினை சிக்கல் இன்றி நிறைவேற்ற வேண்டும்

(7) எடுத்த முடிவு நிறைவேற்றப்படும் போது சரிவர நிறைவேறுகிறதா கண்காணிக்க வேண்டும்.

## முடிவெடுத்தலின் அடிப்படைகள்

செகிலர் ஹட்சன் என்ற அறிஞர் முடிவெடுத்தல் பணியில் கீழ்கண்டவை அடிப்படையாக அமைகின்றன.

1. சட்ட வரையறை எல்லை
2. வரவு செலவு திட்டம்
3. உண்மை விபரங்கள்
4. எதிர் காலம்
5. உயர் அதிகாரிகள்
6. பணியாளர்கள்
7. வரலாறு
8. மன நேர்மை
9. தன்னிலை குழுக்கள்
10. நிகழ்ச்சியின் தன்மை
11. கீழ்ப் பணியாளர்கள்

## முடிவு எடுத்தலின் படிநிலைகள்.

டெரி என்ற அறிஞர் நல்ல முடிவு மேற்கொள்ளும் போது கீழ்காணும் படிநிலைகள் கடைபிடிக்க வேண்டும்.

E சரிவர செயல்படுகிறதா என கவனிக்க வேண்டும் E

D எளிய முறையை தேர்வு செய்ய வேண்டும் D

C நன்மை தீமையை அறிய வேண்டும் C

B தீர்க்கும் வழிமுறைகளை அறிய வேண்டும் B

A பிரச்சனை உருவாகும் இடம், பின்னணி A

பிரச்சனை என்ன என்பதை உணர வேண்டும்

முடிவெடுத்தலின் போது ஏற்படும் பிரச்சனை அல்லது சிக்கல்

(1) முடிவெடுத்தலின் போது ஏற்படும் பிரச்சினைகள் அல்லது சிக்கல்

2) அன்றாடம் மற்றும் வழக்கமான பணியால் ஏற்படும் பிரச்சனை

3) எந்த பிரச்சனையை முதலில் தீர்ப்பது என்ற சிக்கல்

4. சிறந்த முடிவை தெரிவு செய்யும் சிக்கல்

5) சொந்த விருப்ப பிரச்சனை.

பாரபட்ச அல்லது சார்பு பிரச்சனை ஏற்பட காரணங்கள்

1) முடிவெடுக்கும் தனிப்பட்ட உரிமை

2) பிரச்சினை பற்றி தெளிவில்லாத நிலைமை

3) கடுமையான விதி முறைகள்

4) பின் விளைவு பயம்

5, உறவினர்களுக்கு சலுகை அல்லது தனிப்பிரச்சனை.

6 ஜாதி மற்றும் மத உணர்வுகள்

7, சூழ்நிலை பாதிப்பு.

## முடிவு எடுத்தலின் போது ஏற்படும் பாரபட்ச பிரச்சனை நீக்கும் வழிமுறைகள்

1. முடிவு எடுக்கும் போது எளிதாகவும் தெளிவானதாகவும் இருக்க வேண்டும்
2. ஆலோசனை குழுக்கள் ஏற்படுத்தி அதன் தரும் செய்திகளை கொண்டு முடிவு எடுக்க வேண்டும்
3. ஊழியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் முடிவு எடுப்பது பாரபட்சம் குறைக்கப்படும்
4. அரசியல் தலையீடு இல்லாமல் இருக்க வேண்டும்
5. முடிவு எடுக்கும் பணியில் பங்கு பெறுபவர் படிப்பு, அனுபவம் பெற்று, பயிற்சி, திறமை இருக்க வேண்டும்.

ஹெ
## ஹெர்பட் சைமனின் அறிவியல் முறை முடிவெடுத்தல்


ஹெர்பட் சைமன் பொது நிர்வாக நிபுணர் Administrative behaviour என்ற நூலில் அறிவியல் முறை மூலம் எடுக்கப்படும் முடிவெடுத்தலை தெளிவாக்கி கூறுகிறார் அவர் கருத்துப்படி அறிவியல் முறை முடிவு எடுத்தலில் கீழ்காணும் வழிமுறைகள்

A. B, C. வரிசை முறை

முடிவு எடுக்கும் அதிகாரத்தைப் பெற்ற ஒருவர் தான் எதிர்நோக்கும் பல பிரச்சனைகளை அதன் முக்கியத்துவத்திற்கு ஏற்றவாறு வரிசை மூலம்

A, B, C என வரிசை படுத்த வேண்டும்.

## பிரச்சனையை ஆய்வு செய்தல்




இரண்டாம் படிநிலையில் ஒவ்வொரு பிரச்சனையும் என்ன எப்படி ஏற்பட்டது என்பதை தீர்வு ஆய்வு செய்ய வேண்டும்

## பல வழிகளை கண்டறிதல்

மூன்றாவது நிலையில் ஒவ்வொரு பிரச்சனையும் என்ன எப்படி ஏற்பட்டது என பல வழிமுறைகளை கண்டறிதல்

## பணியாளர்களுடன் ஆலோசனை

முடிவு எடுக்கும் அதிகாரம் தன் கீழ் பணிபுரியும் சில அதிகாரிகளை அழைத்து முடிவு மேற்கொள்வது பற்றி ஆலோசனை செய்ய வேண்டும்.

## முறையை அறிவித்து செயல் படுத்துதல்

இந்த நிலையில் பணியாளர்களுடன் ஆய்வு செய்த முறையை தேர்வு செய்து அறிவித்து அதை உடன் செயல்படுத்த வேண்டும்.

மேற்கூறிய முறையில் மேற்கொள்ளப்படும் முடிவுகள் சிறந்த முடிவாகவும் பாரபட்சம் இல்லாத முடிவாகவும் அமையும் என ஹெர்பர்ட் சைமன் சுட்டி காட்டுகின்றார்.